*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p430-441** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# ஐங்குறுநூற்றில் ‘தாய்க்கு உரைத்த பத்து’ காட்டும் நெய்தல் நில மனையறம்

Dometic Life of the Neithal Landscape as Represented in the ‘Taykku Uraitta Pattu’ of Ainkurunuru.

**Sahaya Susi A*,**
*(**Reg No:241130601012** ), Research Scholar, Research Centre of Tamil,*
*Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802.*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India 627 012.*
*Mail id: sahayasusijohnpaul@gmail.com **ORCID**: https://orcid.org/0009-0009-7244-734X*

**Dr S. Elamaran,**
*Assistant Professor & Research Supervisor, Department of Tamil & Research Centre,*
*Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802.*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli,Tamilnadu India- 627 012.*
*Mail id: maranlpc@gmail.com, **ORCID**: https://orcid.org/0000-0002-7559-5980*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email: *sahayasusijohnpaul@gmail.com*

**Abstract:** Sangam literature stands as a vital literary record of the life, culture, social relationships, and economic conditions of the ancient Tamil people. Among the Ettuthogai anthologies, the Neithal thinai poems of Ainkurunuru offer valuable insight into the inner (agam) life of the coastal community. In particular, the ten poems known as ‘Thaaikku Uraitha Pathu’ reveal aspects of the hero–heroine relationship, love, separation, waiting, betrothal, and marriage. This study examines the household ethics (manaiyaram) of the Neithal landscape as portrayed in these poems, situating them within the wider context of Tolkappiyam’s thinai theory and recent scholarship on Ainkurunuru. The study concludes that Neithal manaiyaram was structured on the interconnected values of love, responsibility, trust, and social recognition.

**Keywords:** *Neithal Tiṇai, Tāykkū Uraitta Pattu, domestic life, love, waiting, marital commitment, marriage, childbirth, family.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வியல், பண்பாடு, சமூக உறவுகள், பொருளாதார நிலை ஆகியவற்றைப் பதிவு செய்யும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவ்வகையில், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றின் நெய்தல் திணைப் பாடல்கள் கடல்சார் மக்களின் அகவாழ்வை அறிந்துகொள்ளப் பெரிதும் துணைபுரிகின்றன. குறிப்பாக, "தாய்க்கு உரைத்த பத்து" பாடல்கள் தலைவன் – தலைவி உறவு, காதல், பிரிவு, காத்திருப்பு, மணவுறுதி, திருமணம் ஆகிய வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வாய்வு, "ஐங்குறுநூற்றில் தாய்க்கு உரைத்த பத்து காட்டும் நெய்தல் நில மக்களின் மனையறம்" என்ற நோக்கில் அமைகிறது. இப்பாடல்களில் இடம்பெறும் காதல் வாழ்க்கை, காத்திருப்பு, மணவுறுதி, பொருளீட்டச் செல்லல், திருமணம், குழந்தைப் பேறு ஆகிய கூறுகள் ஆராயப்படுகின்றன. தலைவியின் அன்பு, நம்பிக்கை, பிரிவுத்துயரம், தலைவனின் பொருளீட்டல் முயற்சி, தோழியின் இடையீடு, தாயின் பங்கு ஆகியவற்றின் வழியாக குடும்ப உறவுகளும் சமூகப் பண்பாடும் வெளிப்படுகின்றன. காதல் என்பது தனிமனித உணர்வாக மட்டுமன்றி, திருமணத்தையும் குடும்ப வாழ்வையும் நோக்கிய சமூக உறவாகவும் அமைந்திருந்தமை புலப்படுகிறது. இதன்வழி, நெய்தல் நில மக்களின் மனையறம் அன்பு, பொறுப்பு, நம்பிக்கை, சமூக அங்கீகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்ததை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. மேலும், இவ்வாய்வு தற்கால வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், தமிழக அறிஞர்களின் கருத்துகளையும் ஒப்பிட்டு நெய்தல் நில மனையற வாழ்வியலின் தனித்துவத்தை விளக்க முற்படுகிறது.

**குறிப்புச் சொற்கள் (Keywords)**

*நெய்தல் திணை, தாய்க்கு உரைத்த பத்து, மனையறம், அகத்திணை, களவொழுக்கம், கற்பொழுக்கம், மணவுறுதி, திருமணம், குடும்பம், சங்க இலக்கியம்.*

## 1. முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியல், பண்பாடு, சமூக உறவுகளை அறிய உதவும் முக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றுள் ஐங்குறுநூற்றின் நெய்தல் திணைப் பாடல்கள் கடல்சார் மக்களின் அகவாழ்வை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, 'தாய்க்கு உரைத்த பத்து' பாடல்கள் காதல், காத்திருப்பு, பிரிவு, மணவுறுதி, திருமணம், குடும்பப் பொறுப்பு ஆகியவற்றின் வழியாக நெய்தல் நில மக்களின் மனையறத்தைப் புலப்படுத்துவதாக உள்ளன என்பதை இவ்வாய்வின் மூலம் காணலாம்.

## 2. ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது:

- ஐங்குறுநூற்றின் 'தாய்க்கு உரைத்த பத்து' பாடல்களில் இடம்பெறும் மனையற வாழ்வியல் கூறுகளை அடையாளம் காண்பது.
- நெய்தல் நில மக்களின் காதல், மணவுறுதி, திருமணம், மகப்பேறு ஆகிய வாழ்வியல் நிலைகளை ஒப்பாய்வு செய்வது.
- தலைவன், தலைவி, தோழி, தாய் ஆகியோரின் பங்கு மனையற உருவாக்கத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என ஆராய்வது.
- நெய்தல் திணை மனையறத்தை பிற திணைகளுடனும், சமகால ஆய்வுக் கட்டுரைகளுடனும் ஒப்பிட்டு அதன் தனித்துவத்தை வெளிக்கொணர்வது.

## 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு தரவு பகுப்பாய்வு முறையையும் (analytical method) ஒப்பீட்டு முறையையும் (comparative method) கையாள்கிறது. முதன்மைச் சான்றாக ஐங்குறுநூற்றின் 'தாய்க்கு உரைத்த பத்து' பகுதியிலுள்ள பாடல்கள் (101, 102, 103, 104, 106, 107, 108, 110) கொள்ளப்பட்டு, அவற்றின் உள்ளடக்கம் விளக்கவுரையுடன் ஆய்வு செய்யப்படுகிறது. துணைச் சான்றுகளாக திருக்குறள், தொல்காப்பியம் தொடர்பான உரையாசிரியர் கருத்துகள், மற்றும் ஐங்குறுநூறு தொடர்பான சமகால வெளியீடுகள் (இதழ்களில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள்) பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 4. ஐங்குறுநூறும் நெய்தல் திணைப் பாடியோனும்

ஐங்குறுநூற்றின் பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையையும், ஆறடிப் பேரெல்லையையும் கொண்டவை. ஒவ்வொரு திணைக்கும் உரிய நூறு பாடல்களும் பத்துப் பத்துப் பாடல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்துப்பாடல்களின் பகுப்பிற்கும் ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. பத்துப் பாடல்களில் உள்ள உரிப்பொருள், கருப்பொருள், கூற்று உரைப்போர், கேட்போர், அந்தப் பகுப்பிற்குப் பெயராக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை இயற்றினோன் வரலாற்றைப் பழஞ்செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

*"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்*
*கருதுங் குறிஞ்சிக் கபிலன் – கருதிய*
*பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே*
*நூலையோ தைங்குறு நூறு"*

*(ஐங்குறுநூறு - பதிப்புரை)*

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

### *4.1. அம்மூவனார்*

இப்புலவர் மலைநாட்டிற் பிறந்தவராக அறியப்படுகிறார். அந்நாட்டுத் தொண்டியை இவர் புகழ்ந்து பாடுவதால் இதனை அறியலாம். மூவன் என்னும் பெயர் மலைநாட்டுப் பகுதியில் பெருவழக்கு என்பர் சான்றோர். இவர் சேரனாலும் பாண்டியனாலும் பேணப்பட்டவர் என இவரது பாடல்கள் வழி அறிகிறோம். மேலும் திருக்கோவைலூரையாண்ட காரிவள்ளல் பாலும் இவர் அன்புடையவராகக் காணப்படுகிறார். கொற்கையிற் கிடைக்கும் முத்தினை இந்நூலின் 185 ஆம் செய்யுளில் தலைவியின் பல்லுக்கு உவமையாகப் பயன்படுத்தியுள்ளார் (ஐங்குறுநூற்றுப் பதிப்புரை).

### 5. மனையறக் கூறுகள்

பழந்தமிழகத்தில் மக்கள் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது (கே. கே. பிள்ளை, ப. எண். 132). சங்க இலக்கியத்தில் “வீடு” என்பதற்குப் பதிலாக “மனை” என்ற சொல்லே காணப்படுகிறது. உண்டு, உறங்கி, இனம் பெருக்கும் இந்த இடத்துக்குரியவள் “மனைவி” எனப்பட்டாள் (தொ. பரமசிவன், ப. எண். 122). இல்லறம் என்றால் மனையறம். இல் என்றால் மனை அல்லது வீடு. வீட்டிற்குரிய காரணத்தாலேயே, மனைவிக்கு இல், இல்லாள், இற்கிழத்தி என்னும் பெயர்கள் வந்தன. எனவே, இல்லறம் என்றால், வீட்டில் மனைவி முதலியோர் சூழ இருந்து, அறநெறி தவறாமல் குடும்பம் நடத்தும் வாழ்க்கை ஒழுங்கு என்பது பொருள்படும். இல்லற இயல் என்றால், அவ்வில்லறத்தின் இலக்கணங்களை அஃதாவது இல்லறத்தில் இருப்பவர்கள் இயற்றவேண்டிய கடமைகளைக் கூறுவதாக அமைகிறது (பேரா. சுந்தர சண்முகனார், ப. எண். 2).

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும். குறள் - 50*

இல்வாழ்வான் உலகில் வாழும் எல்லோருக்கும் துணையாவான் அவன், பிறர் பழிப்பிற்கு இடமின்றி நல்லமுறையில் வாழ்வானேயானால், அவன் குடும்பம் தொடர்ந்து வாழும். எல்லா நன்மைகளும் கிடைக்கும். ஆதலின், அவன் ஏனையோரைக் காட்டிலும் சிறந்தவன் ஆவான். அது குறித்து, எல்லோரும் அவனைத் தெய்வமாய்ப் போற்றுவார்கள் என தெய்வப்புலவர் வள்ளுவரும் இல்லறமான மனையறத்தைப் பற்றி பேசியுள்ளார்.

### 6. மணவாழ்வின் இன்றியமையாமை

ஆணாகட்டும் – பெண்ணாகட்டும்! திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழலாகாது, மணந்து இணைந்தே வாழவேண்டும். இதற்குரிய காரணங்களாவன.

மாறுபட்ட உருவ அமைப்பும் ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருக்கின்ற இயற்கையின் நோக்கம் இருசாராரும் மணந்து வாழவேண்டும் என்பதேயாகும். இயற்கையின் முறையீடாகிய காமஉணர்வை அடக்குவது எவர்க்கும் அரிது. அடக்கவுங் கூடாது.

நீண்டநாள் மணந்து கொள்ளாது தனித்து வாழ்ந்த சிலர், பின்னர் அத்தனி வாழ்க்கையில் தோல்வியுற்று வயதான காலத்தில் மணந்து கொண்டிருக்கின்றனர். இறுதிவரையுமே மணந்து கொள்ளாத சிலர் இடையிடையே தவறிவிட்டிருக்கின்றனர். திருமணம் செய்துகொள்ளாதவர்கள் இல்வாழ்க்கையால் பெறக்கூடிய எத்தனையோ வாய்ப்பு வசதிகளை – எத்துணையோ வளங்களை – எவ்வளவோ நற்பேறுகளை வீணாய் இழந்து விடுகின்றனர்.

மேலும் இவர்களுடைய பெற்றோர்கள் வயது முதிர்ந்து வருந்துங் காலத்தில், அவர்கட்கு உணவு முதலிய வசதிகளை இவர்கள் எவ்வாறு செய்தளிக்க முடியும்? அது இவர்களுடைய இன்றியமையாத கடமையாயிற்றே? விருந்தினர், இரவலர் முதலியோர் வரின் என்ன செய்வார்கள்? இவர்கள் பாடே திண்டாட்டமாயிற்றே! அப்போது இன்னொருவரது கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இவர்கள் திருமணம் செய்துகொள்ளாது தப்பித்துக் கொண்டார்கள். ஆனால் இவர்கட்கு அன்றாடம் தேவைப்படுகின்ற உணவு ஆக்குதல், பிணிவந்துவிடின் மருத்துவ வேலை, வயதான காலத்தில் பணிவிடை – இன்னபிறவற்றை யார் ஆற்றுவது? திருமணம் செய்துகொண்டு வாழும் குடும்பத்தினர் தாமே இவர்கட்கு இவையெல்லாம் செய்ய முடியும் – செய்தும் வருகின்றார்கள். இவர்கள் மீந்துகொள் இன்னொருவர் உழைப்பதா? இது என்ன முறை? (பேராசிரியர் சுந்தர சண்முகனார், வள்ளுவர் கண்ட மனையறம், ப. எண். 72).

### 7. தாய்க்கு உரைத்த பத்து

(அன்னை – செவிலித்தாய்) செவிலித்தாயிடம் தோழி கூறும் செய்திகள் இந்த பத்துப் பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. காதலன்–காதலி உறவு, திருமணமாக மாறுகிறது. தலைவனின் தேர் கடலோரக் கானல் மணலில் வருகிறது. திருமணச் செய்தியுடன் அத்தேர் வருகிறது. தோழிக்கும் தலைவிக்கும் அது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. தாயும் அதைக் கேட்டு மகிழ வேண்டுமென்று தோழி, செவிலித்தாயிடம் அந்நிகழ்ச்சியைக் கூறுவது போல தாய்க்கு உரைத்த பத்து பகுதியில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### 8. காதலும் களவொழுக்கமும்

பிரிவும் காத்திருத்தலும் வேண்டித் தலைவியைப் பிரிந்த தலைவன் மீண்டும் வருவானான என எண்ணி வருந்தும் தாய்க்குத் தோழிக் கூறுவதாக ஐங்குறுநூறு 101 – வது பாடல் அமைந்துள்ளது.

*"அன்னை, வாழி! வேண்டு, இன்னை உதுக்காண்-*
*ஏர் கொடிப் பாசடும்பு பரிய ஊர்பு இழிபு*
*நெய்தல் மயக்கி வந்தன்று, நின் மகள்*
*பூப்போல் உண்கண் மரீஇய*
*நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே".*

*(ஐங் 101)*

பச்சை நிற அடும்பு என்னும் மலர் நெய்தல் நிலத்திற்குரியது. அதன் இலைகள் மாட்டின் குளம்புபோல் தோன்றும். கடற்கரை பகுதியில் உள்ள அடும்புச்செடியில் தேர் ஏறி இறங்கி ஊர்கிறது. இதனால் நெய்தல் நிலமானது சிதைகிறது. தலைவியின் கண்கள் நீலநிறமுடையது, அந்த கண்கள் தலைவனை எண்ணி வாடி நோய் உற்றுக் கிடக்கிறது. அந்த நோய் நீங்கவே அவளை திருமணம் செய்ய வேண்டி நெய்தல் தலைமகனான கொண்கன் விரைந்து வருகிறான் எனக் கூறுகிறாள் தோழி. மேலும், தலைவிக்குத் தலைவனை எப்போதும் நினைத்து பசலை நோய் ஏற்பட்டது. அது நீலக்கடலில் பறக்கும் பறவைப் போல கடலின் மேலும் கீழுமாய் பறந்து துன்பப்படுகிறதைப் போல் வருந்தும் தலைவியைக் கண்டு ஊரார் அலர் பேசினார்கள். அந்த ஊரார் வாயடைத்துப் போக தலைவன் திரும்பி வருவான். அவன் வந்ததும் இவர்கள் எல்லாம் வாயடைத்துப் போவார்கள் என்பதாக ஐங்குறுநூற்றில் உள்ளுறை மற்றும் உவமேயம் பற்றிக் கூறும் செய்தி 102 பாடலில் உள்ளது.

*"அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – நம் ஊர்*
*நீல் நிறப் பெருங்கடற் புள்ளின் ஆனாது,*
*துன்புறு துயரம் நீங்க,*
*இன்புற இசைக்கும், அவர் தேர் மணிக் குரலே".*

*(ஐங் 102)*

என்னும் பாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. களவொழுக்கத்தில் இருவர் ஒருவராக இருந்த பொழுதுகளை எண்ணி வருந்தி தலைவி உடல் மெலிந்து வருந்தும் அளவிற்கு இருந்தாள் என்பதை, ஐங்குறுநூறு 106 பாடல் வழியாக எடுத்துத்துரைக்கிறது.

*"அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – அவர் நாட்டுத்*
*துதிக்கால் அன்னம் துணை செத்து மிதிக்கும்*
*தண் கடல் வளையினும் இலங்கும் இவள்*
*அம் கலிழ் ஆகம் கண்டிசின் நினைத்தே".*

*(ஐங் 106)*

என்பதைப் பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும், தலைவன், தலைவியை களவொழுக்கத்தில் காதல் செய்தபின் வரைவிற்கு காலதாமதம் செய்ய அது தெரியாத உறவினர்கள் தலைவியைப் பெண் கேட்டு

வந்தனர். அந்நிலையில் தோழி தலைவியின் கற்பைக் காக்கும் பொருட்டு செவிலித்தாயிடம் கூறினாள் என்பதை ஐங்குறுநூற்று 110 பாடல் வழியாக உணர முடிகிறது.

*அன்னை, வாழி! வேண்டு அன்னை! -புன்னை*
*பொன் நிறம் விரியும் பூக்கெழு துறைவனை*
*'என்னை' என்றும், யாமே; இவ் ஊர்*
*பிறிது ஒன்றாகக் கூறும்;*
*ஆய்கும் ஆக்குமோ, வாழிய, பாலே!*

*(ஐங் 110)*

என்பதைப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**9. அறத்தொடு நின்ற பின் வரைவு**

களவொழுக்கங்கள் சங்க இலக்கியத்தில் புனிதமாக பார்க்கப்பட்டது. பெரும்பாலும் களவொழுக்கம் வரைவில் தான் முடிந்திருக்கிறது. ஆனால் இன்றைய களவு என்பது வெறுமனே நேரத்தைக் கழிப்பதற்கும், பணத்தைச் செலவிடுவதற்குமே உதவுகிறது. பகற்குறி மற்றும் இரவுக்குறியில் சந்தித்து களவொழுக்கத்தில் ஈடுபட்டு வாழும் காதலர்கள் வரைவினை நோக்கி நகர்வதை ஐங்குறுநூற்று 107 பாடல் வழியாக காணலாம்.

*"அன்னை, வாழி! வேண்டு,அன்னை! –என் தோழி*
*சுடர் நுதல் பசப்பச் சாஅய், படர் மெலிந்து*
*தண் கடற் படு திரை கேட்டொறும்,*
*துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே".*

*(ஐங் 107)*

அவள் மேனி மீண்டும் அழகு பெறவும், நுதல் தான் இழந்த ஒளியை மீண்டும் பெறவும், அவள் இழந்த உறக்கத்தை மீண்டும் எய்தவும், அத்தலைவனைக் கணவனாக அடைதலே ஒரே வழி என்று வற்புறுத்தினாள் என்பதன் மூலம் அறிய முடிகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற முதுமொழிக்கு ஏற்ப முண்டகம் என்பது கழிமுள்ளிச்செடியாகும். அச்செடிபோல தலைவியை விரும்பிய தலைவன் மனது வேறு பெண்ணை தேடிச் செல்லமாட்டான். அப்படி அவன் செய்வானானால் அந்த உறவில் எந்தப் பயனும் இல்லை என்பதை ஐங்குறுநூற்று 108 பாடல் வழியாக காணலாம்.

*"அன்னை, வாழி! வேண்டும், அன்னை! கழிய*
*முண்டகம் மலரும் தண் கடற் சேர்ப்ப்*
*உம் தோள் துறந்தனன் ஆயின்,*

*எவன்கொல் மற்று அவன் நயந்த தோளே?"*

*(ஐங் 108)*

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

## 10. மணவுறுதியும் சமூக அங்கீகாரமும்

வாழ்நாள் முழுவதும் இணைந்து பயணிக்கக் கூடிய கணவன் அல்லது மனைவியை வாழ்க்கைத் துணை என்று அழைக்கப்படுகின்றனர். திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் மற்றும் ஏழேழு ஜென்மத்திற்கும் தொடரும் புனிதமான ஒரு பந்தம் என்று நம்மிடையே பண்பாட்டு முதுமொழி ஒன்று உண்டு. அதுபோலவே புன்னையும் ஞாழலும் நெய்தல் நிலத்துக்கு உரியன, அவை இரண்டும் ஒருசேரப் பூத்துக் குலுங்குவதுபோல தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கையில் இணையும்போது சிறப்பாக இருக்கும் என்பதை ஐங்குறுநூறு 103 – வது பாடல் விளக்குகிறது. அவையாவன,

*"அன்னை, வாழி! வேண்டு, அன்னை! -புன்னையோடு*

*ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்*

*இவட்கு அமைந்தனனால் தானே,*

*தனக்கு அமைந்தன்று, இவள் மாமைக் கவினே".*

*(ஐங் 103)*

புன்னையும் ஞாழலும் நெய்தல் நிலத்துக்கு உரியன. அவை இரண்டும் ஒருசேரப் பூத்து அழகு செய்யும் கடற்றுறையின் தலைவன் இவளுக்காவே இறைவனால் படைக்கப்பட்டவன். முந்தைய பிறப்பிலும் இவர்கள் ஒருவர்க்கொருவர் பொருந்தி வாழ்ந்ததால் இப்பிறப்பிலும் பொருந்தி வாழ ஊழே துணைநின்றது என்றதன் மூலம் திருமணப் பந்தம் ஏழேழு ஜென்மங்கள் தொடர்ந்து வருவதை அறிய முடிகிறது.

## 11. மகப்பேறும் குடும்பத் தொடர்ச்சியும்

களவு வாழ்க்கையில் நள்ளிரவில் யாரும் அறியாத வண்ணம் தலைவியோடு களவொழுக்கத்தில் மகிழ்ந்து இருந்தவன், வரைவிற்குப் பின்னர் தனது குலம் வாழ வேண்டி தன்னுடைய குழந்தையை சீராட்டி வளர்க்க பொறுப்புடன் நடந்துகொள்பவனாக மாறுவதை ஐங்குறுநூற்று 104 – வது பாடல் எடுத்துரைக்கிறது.

*"அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – நம் ஊர்ப்*

*பலர் மடி பொழுதின், நலம் மிகச் சாஅய்*

*நள்ளென வந்த இயல் தேர்ச்*

*செல்வக் கொண்கன் செல்வனஃது ஊரே". (ஐங் 104)*

தலைவன் பலரும் உறங்கும் நள்ளிரவில், தன் நலம் கெடும்படியாகத் தலைவியைக் காணும் பொருட்டாகப் பலகாலும் வந்தவன். அவனுடைய மெய்யன்பையும் மேன்மைப் பண்பையும் பாராட்டும் நோக்கில் ஒரு மகனுக்குத் தந்தையானான். அவன் கடற்கரை நாட்டுக்குரிய செல்வக் கொண்கன் இப்போது மேலும் பல வளங்களைப் பெற்றான். அவனுடைய அரும்பெறற் புதல்வனை அச்செல்வத்துக்குரியவனாக திகழ்வான். தலைவிக்கும் தலைவனுக்கும் பிறந்த ஆண்குழந்தையால் அவர்களுடைய செல்வம் மென்மேலும் பெருகியது. இனி அச்செல்வங்களுக்கெல்லாம் தலைவனாகப் புதல்வன் இருப்பான் என்பதை இப்பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

## 12. நெய்தல் மனையறமும் பிற திணை மரபுகளும் – ஓர் ஒப்பீடு

தொல்காப்பியர் வகுத்த அகத்திணை மரபின்படி, குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த நிலமும்), முல்லை (காடும் காடு சார்ந்த நிலமும்), மருதம் (வயலும் வயல் சார்ந்த நிலமும்), நெய்தல் (கடலும் கடல் சார்ந்த நிலமும்), பாலை (வறண்ட நிலம்) என ஐந்து நிலப்பகுப்புகள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்த உரிப்பொருள் (உளவியல் நிலை) வகுக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்திற்குப் புணர்தலும், முல்லைக்குக் காத்திருத்தலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும் (பிரிவால் வருந்துதலும்), பாலைக்குப் பிரிதலும் உரிப்பொருளாக அமைந்துள்ளன. இந்த மரபின் அடிப்படையில் நோக்கும்போது, நெய்தல் திணையின் மனையறம் 'காத்திருப்பும் ஏக்கமும்' மையமிட்டு உருவாகியிருப்பதைக் காணமுடியும்; தலைவி கடலலைகளையும் பறவைகளையும் நோக்கிக் காத்திருத்தல், தலைவனின் தேர் வருகைக்காக ஏங்குதல் என்பன இதற்குச் சான்றுகளாகும்.

நெய்தல் திணையின் அகத்திணை மரபு பற்றிய சமீபத்திய ஆய்வு ஒன்று, ஐங்குறுநூறு காதல், பிரிவு, மகிழ்ச்சி, அடக்கம், தாய்மை அன்பு, செவிலியின் ஞானம் ஆகிய பல்வேறு உணர்வுகளையும் சமூக மரபுகளையும் இயற்கைச் சின்னங்கள் வழியாக வெளிப்படுத்துவதாகவும், அதன்மூலம் அகத்திணை மரபின் ஆழத்தையும் சங்கப் பண்பாட்டின் விழுமியங்களையும் பிரதிபலிக்கிறது எனவும் சுட்டிக்காட்டுகிறது. இது தொழிலின் கண்ணியம், பெண்களின் இல்லற நற்பண்புகள், தாய்மை அன்பு, செவிலியரின் ஞானம், சமூக நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி அகத்திணையின் எல்லையை விரிவுபடுத்துவதாகவும் விளக்கப்படுகிறது ("ஐங்குறுநூறு அகத்திணை மரபும் வாழ்வியல் விழுமியங்களும்" 1151-55). இக்கருத்தின் வழி நோக்கும்போது, 'தாய்க்கு உரைத்த பத்து' பாடல்களில் இடம்பெறும் தோழியின் பேச்சும் தாயின் அக்கறையும் நெய்தல் மனையறத்தின் சமூகப் பரிமாணத்தை மேலும் தெளிவுபடுத்துகின்றன.

பாலைத் திணையில் பெண்களின் நிலை குறித்த ஒரு ஆய்வு, தலைவியின் மனநிலை பன்முகத் தன்மை கொண்டதாகவும், தோழியின் ஆறுதல் மொழியால் தலைவியின் மனஉறுதி காக்கப்படுவதாகவும், செவிலித்தாய் உண்மையிலேயே தலைவிக்குத் தாய்போன்ற பங்கை ஏற்பதாகவும் விளக்குகிறது (J 1-

7). இக்கூறுகள் நெய்தல் திணையிலும் ஒத்த வகையில் காணப்படுவது, தோழி-தாய்-தலைவி என்னும் மூவர் உறவுமுறை சங்க இலக்கியத்தின் பொதுவான மனையற வடிவமைப்பாக இருந்திருக்கலாம் என்பதைச் சுட்டுகிறது.

## 13. சமகால ஆய்வுகள் முன்வைக்கும் கருத்துகள்

ஐங்குறுநூற்றின் அறவியல் கூறுகள் குறித்த ஆய்வு ஒன்று, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் போலவே ஐங்குறுநூறும் தமிழரின் அறநெறி வாழ்வியலை வெளிப்படுத்துவதாகவும், தலைமைப் பண்புகள் மேலைநாட்டு சிந்தனையில் சுட்டப்படுவதற்கு முன்பே தமிழ் அறவியல் இலக்கியங்களில் இடம்பெற்றிருந்தன எனவும் நிறுவுகிறது (N 121-31). இக்கருத்து, தலைவன் பொருள்வயிற் பிரிந்து குடும்பப் பொறுப்பேற்கும் செயல்பாட்டை (ஐங் 104) தலைமைப் பண்பின் வெளிப்பாடாகவும் நோக்க வைக்கிறது.

மார்த்தா ஆன் செல்பியின் ஆங்கில மொழிபெயர்ப்பினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு, ஐங்குறுநூற்றுப் பாடல்களில் இடம்பெறும் குடும்ப அமைப்பு (oikos) ஒருங்கிணைந்த வடிவிலும், படிநிலை வடிவிலும், சில நேரங்களில் ஒழுங்கற்ற வடிவிலும் காணப்படுவதாக வகைப்படுத்துகிறது; இது தொல்காப்பியம் வகுத்த திணைக் கோட்பாடு உலகளாவிய இலக்கியக் கோட்பாடாகவும் பரிசீலிக்கப்படலாம் என்னும் கருத்தை முன்வைக்கிறது (“Integrative, Hierarchic, and Anarchic Oikos”). இக்கண்ணோட்டத்தின் வழி நோக்கும்போது, ‘தாய்க்கு உரைத்த பத்து’ பாடல்களில் தலைவி-தோழி-தாய் என்னும் மூவரும் இணைந்து செயல்படும் விதம் ஒரு ஒருங்கிணைந்த குடும்ப அமைப்பை (integrative oikos) பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்.

மேலும், நெய்தல் திணைப் பாடல்களை சூழலியல் நோக்கில் (ecocritical) அணுகும் ஆய்வு ஒன்று, நிலமும் உணர்வும் இணைந்து வெளிப்படும் விதம் நுட்பமான இலக்கிய மரபை எடுத்துரைப்பதாகவும், அது இன்றும் வாசகர்களையும் அறிஞர்களையும் கவரும் தன்மை கொண்டது எனவும் முடிவு செய்கிறது (“Tinai as an Ecocritical Concept”). இக்கருத்தும் ‘தாய்க்கு உரைத்த பத்து’ பாடல்களில் அடும்பு, புன்னை, ஞாழல், கடலலை, பறவை போன்ற நெய்தல் நிலக் குறியீடுகள் தலைவியின் உணர்வுநிலையோடு பின்னிப் பிணைந்து வருவதை உறுதிசெய்கிறது.

## 14. நிறைவுரை

ஐங்குறுநூற்றின் நெய்தல் திணைப் பாடல்களுள் இடம்பெறும் ‘தாய்க்கு உரைத்த பத்து’, கடல்சார் மக்களின் அகவாழ்வையும் குடும்ப உறவுகளையும் அறிந்துகொள்ளச் சிறந்த இலக்கியச் சான்றாகத் திகழ்கிறது. இப்பாடல்களில் காதல், களவொழுக்கம், பிரிவு, காத்திருப்பு, மணவுறுதி, திருமணம், மகப்பேறு ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய வாழ்வியல் கூறுகளாக வெளிப்படுகின்றன. தலைவன் – தலைவி உறவு தனிப்பட்ட காதல் உணர்வாகத் தொடங்கி, சமூக அங்கீகாரம் பெற்ற

மணவாழ்வை நோக்கி நகர்கிறது. இந்நகர்வில் தோழி, தாய், உறவினர், ஊரார் ஆகியோரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. தலைவியின் அன்பு, நம்பிக்கை, பிரிவுத்துயரம் ஆகியவை குடும்ப உறவுகளின் உணர்வியல் அடித்தளத்தை வெளிப்படுத்துகின்றன. அதேவேளையில், தலைவன் பொருளீட்டச் செல்வதும், பின்னர் குடும்பத்திற்குத் திரும்புவதும் இல்லறப் பொறுப்புணர்வை உணர்த்துகிறது. திருமணம் என்பது காதலின் நிறைவாக மட்டுமல்லாமல், குடும்பத் தொடர்ச்சிக்கும் சமூக ஒழுங்கிற்கும் அடிப்படையாகக் கருதப்பட்டமை புலப்படுகிறது. மகப்பேறு குடும்ப வாழ்வின் தொடர்ச்சியையும் தலைமுறைப் பரிமாற்றத்தையும் வெளிப்படுத்துகிறது. மேலும், சமகால ஆய்வுகளுடன் ஒப்பிடும்போது, நெய்தல் திணையின் மனையறம் தொல்காப்பிய அகத்திணை மரபின் ஒரு தனித்துவமான வெளிப்பாடாகவும், 'இரங்கல்' (காத்திருப்பு) என்னும் உரிப்பொருளின் அடிப்படையிலான குடும்ப உணர்வுலகமாகவும் அமைந்திருந்தது எனத் தெளிவாகிறது. இதனால், 'தாய்க்கு உரைத்த பத்து' காட்டும் நெய்தல் நில மனையறம் என்பது அன்பு, நம்பிக்கை, பொறுப்பு, மணவுறுதி, சமூக அங்கீகாரம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வாழ்வியல் நெறியாக அமைந்திருந்தது எனலாம். இயற்கையோடு இணைந்த நெய்தல் மக்களின் குடும்ப வாழ்வில் மனித உறவுகளுக்கு வழங்கப்பட்ட முதன்மையை இப்பாடல்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

### ஆசிரியர் அறிக்கை – நலன் முரண்பாடு (Author Declaration – Conflict of Interest)

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கம் தொடர்பாக எவ்வித நேரடி அல்லது மறைமுக நலன் முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என உறுதிப்படுத்துகிறார். இக்கட்டுரை எந்தவொரு நிதி நிறுவனத்தின், அரசு அல்லது தனியார் நிறுவனத்தின் நிதியுதவியின்றி, தனிப்பட்ட கல்வி ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டது (Funding: No funding was received for conducting this study).

### ஆதார நூற்பட்டியல் (References – MLA 9th Edition)

[1]. Dakshinamurthy, A. Ainkurunuru: Mulamum Uraiyum. New Century Book House, 2017.
[2]. J, J. "The Status of Women in Ainkurunuru Palai Thinai." Indian Journal of Multilingual Research and Development, vol. 3, no. 1, 2022, pp. 1-7.
[3]. N, Jaishree. "Moral Thoughts in Ainkurunuru." International Research Journal of Tamil, vol. 4, no. S-19, 2022, pp. 121-31.
[4]. Paramasivan, T. Panpaattin Vaazhviyal. New Century Book House, 2023.
[5]. Pillai, K. K. Tamilaga Varalaru: Makkalum Panpadum. Ulaga Tamilaraichi Niruvanam, 2015.
[6]. Ramalingam Pillai, V. Thirukkural Thelivurai. Thendral Nilayam, 2015.

[7]. Selby, Martha Ann, translator. Tamil Love Poetry: The Five Hundred Short Poems of the Ainkurunuru. Columbia University Press, 2011.

[8]. Sundara Sanmuganar, Per. Valluvar Kanda Manaiyaram. Puduvai Paintamil Pathippagam, 1957.

[9]. "Ainkurunuru." Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Ainkurunuru. Accessed 25 Aug. 2026.

[10]. "Integrative, Hierarchic, and Anarchic Oikos in Ancient Tamil Poetry: An Analysis of Ainkurunuru's Translation by Martha Ann Selby." ResearchGate, 2024, www.researchgate.net/publication/381382542.

[11]. "Tinai as an Ecocritical Concept." Academia.edu, www.academia.edu/34488006/TINAI_AS_AN_ECOCRITICAL_CONCEPT.

[12]. "ஐங்குறுநூறு அகத்திணை மரபும் வாழ்வியல் விழுமியங்களும்." Tamilmanam International Research Journal of Tamil Studies, vol. 2, no. 2, 2025, pp. 1151-55, doi:10.63300/tm0202092521.

**துணைநூற்பட்டியல் (தமிழில்)**

[1]. தட்சிணாமூர்த்தி, அ. ஐங்குறுநூறு மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2017.

[2]. பரமசிவன், தொ. பண்பாட்டின் வாழ்வியல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2023.

[3]. பிள்ளை, கே. கே. தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2015.

[4]. இராமலிங்கம் பிள்ளை, வெ. திருக்குறள் தெளிவுரை. தென்றல் நிலையம், 2015.

[5]. சுந்தர சண்முகனார், பேரா. வள்ளுவர் கண்ட மனையறம். புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், 1957.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.